# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 99 | thalaivaasaltv@gmail.com | புதன்கிழமை | ஜனவரி 13, 2021


## மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களில் கொரோனா பரிசோதனை

நாட்டில் மக்கள் அதிகமாக ஒன்றுகூடும் இடங்களில் கொரோனா தொற்றுக்கான துரித பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

03



அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல் வாழ்த்துகள்

**விடுமுறை**

**தைப்பொங்கலையொட்டி தலைவாசலுக்கு நாளை, நாளைமறுதினம் மற்றும் வழமை போன்று சனிக்கிழமையும் விடுமுறை. எனவே மீண்டும் ஞாயிறன்று சந்திப்போம்**




## மாஸ்டர் திரையிட்ட திரையரங்குக்கு சீல்!

கொரோனா விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் யாழில் உள்ள திரையரங்கம் ஒன்று சுகாதார பிரிவினரால் சீல் வைக்கப்பட்டுள்ளது.

விஜயின் மாஸ்டர் திரைப்படம் உலகளாவிய ரீதியில் வெளியாகியுள்ளது. அந்நிலையில் இலங்கையில் இன்று

03

## வவுனியா நகர கொத்தணி 138

# இன்றும் 12 பேருக்கு தொற்று

03

## பிரித்தானியாவில் இருந்து

# நாடு திரும்பியவருக்கு புது வகை கொரோனா

பிரித்தானியாவில் இருந்து நாட்டிற்கு வந்த ஒருவர் புதிய கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

03



## மட்டக்களப்பில் 24 மணி நேரத்தில் 24 பேருக்கு தொற்று

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் காத்தான்குடி, ஆரையம்பதி, வெல்லாவெளி களுவாஞ்சிக்குடி மற்றும்

03

## மேல் மாகாணம் மீண்டும் முடங்கும்

### பிரதி பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை

மேல் மாகாணத்தை மீண்டும் முடக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், "கொழும்பு, வடக்கு மற்றும் மத்தியக்

03

## ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் இருந்து பிள்ளையான் விடுதலை





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பிலான வழக்கில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உட்பட ஐந்து பேரும் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

03

## முள்ளிவாய்க்கால் தூபி உடைப்புக்கு யாழ். மாநகரசபையில் கண்டன தீர்மானம்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் புதிய முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைத்தல் உள்ளிட்ட மூன்று தீர்மானங்கள் இன்றைய சபை அமர்பில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான முதலாவது அமர்வு இன்றையதினம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் தற்போது இடம்பெற்றது.

இதன்போது கடந்த 8ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்டமையை கண்டித்து யாழ்.மாநகர சபை மூன்று கண்டன தீர்மானத்தை நிறைவேற்றியது.

03






**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் இந்தியா பற்றுறுதி கொண்ட பங்காளி

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் இந்தியா பற்றுறுதி கொண்ட பங்காளியாகத் தொடர்கிறது என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் அபிவிருத்திப் பணிகளில் அதிகூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு எண்ணியுள்ளதாக அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில், "இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வசிக்கும் குடும்பங்களுக்காக 50ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் இந்தியாவின் பிரத்தியேக வீடமைப்புத் திட்டம் இலங்கைத் தீவின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது.

மேலும், வடக்கில் யாழ்ப்பாண கலாசார மையம் மற்றும் ஹற்றன் டிக்கோயாவில் மருத்துவமனை ஆகியவை இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் நிதிக்கடன் திட்டத்தினூடாக வடக்கு மாகாணத்திற்கான தொடருந்து பாதைகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளது.



காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமானநிலையம் ஆகியவற்றை புனர்நிர்மாணம் செய்யும் பணிகள் இந்திய நிதியைக்கொண்டு நடைபெற்றுவருகின்றன. அத்துடன் மலையகத்திற்கு இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் மேலதிகமாக அறிவிக்கப்பட்டுள்ள 10ஆயிரம் வீடுகளுக்கான நிர்மாணப் பணிகள் அடுத்த நான்காண்டுகளில் பூர்த்தியாகவுள்ளன.

பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்பு, ஆம்பியூலன்ஸ் சேவைகள், பாரம்பரியத்தைப் பாதுகாத்தல், கல்வியை மேம்படுத்துதல் போன்ற எமது கடந்தகால கருத் திட்டங்களிலிருந்து பெற்றுக் கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் முழு இலங்கையிலும் கொரோனாவிற்குப் பின்னரான பிராந்திய பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சமூகத்தையும் மனித வளங்களையும் கட்டியெழுப்புவதற்காக நாம் தொடர்ந்தும் ஒத்துழைப்பை வழங்குவோம்.

அதனைக் கருத்திற்கொண்டு, எங்கள் வளர்ச்சி கூட்டாண்மைக்கான எதிர்கால செயற்றிட்டம் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டேன். உள்நாட்டு தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் அடிப்படையில் ஆராய்ந்து எமது உரையாடல்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நாம் கல்வி, திறன் விருத்தி, தொழிற்பயிற்சி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் எமது அதிகூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு எண்ணியுள்ளோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஆறு மாதங்களுக்குள் அனைத்து இலங்கையர்களும் பெரும் தியாகங்களை செய்ய வேண்டும்

புதிய வருடத்தில் எதிர்வரும் ஆறு மாத காலத்துக்குள் அனைத்து இலங்கையர்களும் பெரும் தியாகங்களைச் செய்ய வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் இன்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், ஒரு வளமான நாட்டைக் கட்டியெழுப்ப புதிய வருடத்தில் இத்தகைய தியாகங்களைச் செய்ய வேண்டும் என கூறினார்.

கொரோனா வைரஸிலிருந்து பாதுகாக்கச் முறையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அரசாங்கத்தின் கொரோனா கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

# அவிசாவளையில் அடித்தது அதிஸ்ரம்

அவிசாவளை - தெஹியாகவில் உள்ள ஒரு சுரங்கத்தில் 22 கிலோ எடை உள்ள மிகப்பெறுமதி வாய்ந்த ஒரு ரத்தினக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது .

தேசிய மாணிக்கம் மற்றும் நகை ஆணையம் இதை தெரிவித்துள்ளது.

இந்த அறிய ரத்தினக்கல்லில் நீர் குமிழி இருப்பதால் அதிக மதிப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது .

மாணிக்கம் ஒரு லட்சம் கரட் எடையுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த படிக்கச் ரத்தினத்தின் வணிக மதிப்பு தொடர்ந்து மதிப்பிடுவதாக தேசிய மாணிக்கம் மற்றும் நகை ஆணையத்தின் வட்டாரங்கள் தெரிவித்தன.

# யாழில் மழையால் 1047 பேர் பாதிப்பு!

யாழ். மாவட்டத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக 358 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 47 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரீ.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அத்தோடு நேற்று காலையிலிருந்து யாழ்ப்பாண குடாநாட்டில் பெய்த மழை தாக்கத்தின் காரணமாக 57 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் ரீ.என்.சூரியராஜா மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த பாதிப்புகள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ரீ.என். சூரியராஜா, தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நீடிப்பதன் காரணமாக பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிக செல்வாக்குடைய கடவுச்சீட்டுக்களின் பட்டியலில் 100 ஆவது இடத்தில் இலங்கை

2021 ஆம் ஆண்டின் உலகின் அதிக செல்வாக்குடைய கடவுச்சீட்டுக்களின் பட்டியலை ஹென்லி பாஸ்போர்ட் இன்டெக்ஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இலங்கையின் கடவுச் சீட்டானது 100 ஆவது இடத்தில் உள்ளது. இலங்கையின் கடவுச்சீட்டை பயன்படுத்தி 42 நாடுகளுக்கு விசா இல்லாது பயணிக்க முடியும்.


இப் பட்டியலில் ஜப்பான் நாட்டின் கடவுச்சீட்டு முதலிடம் பிடித்துள்ளது. ஜப்பான் கடவுச்சீட்டை பயன்படுத்தி 191 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும்.

இப் பட்டியலில் ஜப்பான் தொடர்ச்சியாக முதலாம் இடத்தை பிடித்துள்ளமை இது மூன்றாவது சந்தர்ப்பமாகும்.

இரண்டாவது இடத்தை சிங்கப்பூரும் (190), மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களை (189) ஜேர்மன் மற்றும் தென்கொரிய நாடுகளும் பிடித்துள்ளன.

**2021 இல் செல்வாக்குமிக்க கடவுச்சீட்டுகள்**

1. ஜப்பான் (191)
2. சிங்கப்பூர் (190)
3. தென்கொரியா, ஜேர்மனி (189)
4. இத்தாலி, பின்லாந்து, ஸ்பெய்ன், லக்சம்பர்க் (188)
5. டென்மார்க், ஆஸ்திரியா (187)
6. சுவீடன், பிரான்ஸ், போர்த்துக்கல், நெதர்லாந்து, அயர்லாந்து (186)
7. சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, பெல்ஜியம், நியூஸிலாந்து (185)
8. 




கிரேக்கம், மொல்டா, செக் குடியரசு, அவுஸ்திரேலியா (184)

9. கனடா (183)
10. ஹங்கேரி (181)

**2021 இல் வலுவற்ற கடவுச்சீட்டுகள்**

101. ஈரான், பங்களாதேஷ் (41 destinations)
102. லெபனான், கொசோவோ, சூடான் (40)
103. வடகொரியா (39)
104. லிபியா, நேபாள் (38)
105. பாலஸ்தீன் (37)
106. சோமாலியா, யேமன் (33)
107. பாகிஸ்தான் (32)
108. சிரியா (29)
109. ஈராக் (28)
110. ஆப்கானிஸ்தான் (26)

# கொரோனா தடுப்பூசி ஏற்றும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டம்

கொரோனா தடுப்பூசி ஏற்றும் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசி திட்டம் மற்றும் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணி இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

அதன்படி கொரோனா தடுப்பூசி ஏற்றும் நிலையங்களின் எண்ணிக்கையை 4000 இல் இருந்து 5000 வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊசி ஏற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கல், தடுப்பூசியை பெற்றுக்கொள்வோரை பதிவு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கொரோனாவை கட்டுப்படுத்தக்கூடிய ஏதேனும் ஒருவகை அல்லது சில தடுப்பூசி வகைகளை விரைவில் நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் 9 பேர் உட்பட 12 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் 9 பேர் உட்பட 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர்களுக்கு தொற்றுள்ளமை இன்று (புதன்கிழமை) அதிகாலை வெளியான பி.சி.ஆர் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் மேற்கொள்ளப்பட்ட 132 பிசிஆர் பரிசோதனையில் தாதியர் பயிற்சி கல்லூரி மாணவர்கள் 9 பேருக்கும் வெல்லாவெளி சுகாதார பிரிவில் 3 பேர் உட்பட 12 பேருக்கு தொற்றுறுதி கண்டறியப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நாளாந்தம் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றமையினால், பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளைப் பேணி அவதானமாக நடந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

# கைதிகளின் விடுதலை தொடர்பில் மன்னாரில் கலந்துரையாடல்!

அரசியல் கைதிகளை பொங்களுக்கு முன்பாக விடுதலை செய்யக் கோரி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 14 நாட்கள் மும்மதங்களையும் சேர்ந்தவர்கள்,

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மற்றும் ஏனைய பொது அமைப்புக்களும் இணைந்து பிரார்தனை வாரத்தை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் அரசாங்கம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாத நிலையில் அரசாங்கத்திற்கு அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதப்படுத்துவது தொடர்பாகவும்,

அரசியல் கைதிகளின் குடும்ப நிலையை தெளிவுபடுத்த வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் அரசியல் பிரதி நிதிகள் மேற்கொள்ள வேண்டிய,

நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் குழுத் தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இன்று மதியம் 3 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் சட்டத்தரணி எஸ். டினேஸன், தமிழர் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன், தாய் நிலம் அறக்கட்டளை அமைப்பின் இணைப்பாளர் ஏ.சகாயம், சிவில் சமூக செயற்பாட்டாளர் பெனடிற் , மன்னார் நகர சபை உறுப்பினர்கள் , காணமல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் பிரதிநிதிகள் அரசியல் கைதிகளின் குடும்ப உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் அரசியல் கைதிகள் விடயத்தில் செயற்பாடுகளை மேற் கொள்வதற்கான குழு ஒன்றை அமைப்பதற்கான அவசியம் தொடர்பாகவும்,

குறித்த குழுவில் அரசியல் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்வாங்குவது தொடர்பாகவும், தமிழ் அரசியல் கைதிகள் உட்பட தமிழ் மக்களின் அரசியல் சமூக மட்ட பிரச்சினைகளின் உண்மை தன்மையை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வவுனியா நகர...

வவுனியா நகர கோரோனா தொற்று கொத்தணியுடன் தொடர்புடையோரிடம் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் மேலும் 12 பேருக்கு தொற்று உள்ளமை இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதன்மூலம் வவுனியா நகர கொத்தணியினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 138ஆக உயர் வடைந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தின் நகர்ப் பகுதியில் உள்ள பஜார் வீதி, தர்மலிங்கம் வீதி மற்றும் மில் வீதிகளில் காணப்படும் வர்த்தக நிலையங்களில் கடமை புரிபவர்களுள் 54 பேருக்கு கடந்த 8ஆம் திகதி கோரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அந்தப் பகுதிகள் முடக்கப்பட்டு தொற்றாளர்களுடன் தொடர்புடையோர் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்படுகின்றனர்.

இந்த நிலையில் முல்லேரியா மற்றும் அநுராதபுரம் ஆய்வுகூடங்களில் இன்று 666 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

அவர்களில் 12 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் இன்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### பிரித்தானியாவிலிருந்து...

குறித்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பிரித்தானியா மற்றும் பல நாடுகளில் பரவி வரும் கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு காணப்படுவதாக தொற்றுநோயியல் நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் நபர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் அடிப்படையில் குறித்த தொற்றாளர் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பேராசிரியர் நீலிக மாளவிகே மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழக ஆய்வு குழு இதனை உறுதி செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா புதிய மாறுபாடு பிரித்தானியாவில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சில வாரங்களுக்குப் பிறகு, இலங்கை அதிகாரிகள் தொடர்ந்து எச்சரிக்கையுடன் இருந்ததாக அறிவித்தனர்.

அதன் ஒரு பகுதியாக பிரித்தானியாவில் இருந்து நாட்டிற்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் இங்கிலாந்து விமானங்களுக்கு தற்காலிக தடை விக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பில்...

மட்டக்களப்பு போதனாவைத்தியசாலை உழியர்கள் உட்பட 24 பேர் கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டதையடுத்து மாவட்டத்தில் 420 அதிகரித்துள்ளதாக, இன்று புதன்கிழமை (13) மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் தொடர்ந்து மேற்கொண்டுவரும் எழுந்தமானமாக பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் காத்தான்குடி, ஆரையம்பதி சுகாதாரப் பிரிவுகளில் தலா 4 பேர் உட்பட 8 பேரும், வெல்லாவெளி சுகாதார பிரிவில் 3 பேரும், களுவாஞ்சிக்குடி சுகாதார பிரிவில் ஒருவரும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் 12 பேர் உட்பட 24 பேர் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாவட்டத்தில் 420 ஆக உயர்வடைந்துள்ளது. இவர்களில் 145 பேர் குணமடைந்து வீடு சென்றுள்ளர்.

278 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றதுடன் 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் எனவே நாளாந்தம் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றது.

பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார வழிமுறைகளைப் பேணி அவதானமாக நடந்து கொள்ளுமாறு அவர் தெரிவித்தார்

### முள்ளிவாய்க்கால் தூபி...

நினைவுத் தூபி இடித்து அழிக்கப்பட்டமையை கண்டித்து சபை அமர்வு ஐந்து நிமிடங்கள் ஒத்திவைத்தல், யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் உள்நுழைந்தமையை கண்டித்தல்,

மற்றும் மாநகர சபை எல்லைக்குள் புதிய முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அமைத்தல் ஆகிய மூன்று தீர்மானங்கள் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முடிவினை முன்னாள் மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்திருந்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்...

இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து உரிமைக்காக போராடிய அனைவரையும் நினைவுகூரும் வகையில் ஒரு பொதுவான நினைவு தூபி அமைக்கப்பட வேண்டும். இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு.

அந்தவகையில் யாழ் பல்கலைக்களக மாணவன் விஜிதரன் படுகொலை மற்றும் அவருக்கு நீதி கேட்டு போராடிய விமலேந்திரன் உள்ளிட்ட மாணவர்களும் இதில் உள்வாங்கப்பட வேண்டும் என்றும் தமது கட்சியின் கருத்தினை பதிவு செய்துள்ளார்.

தொடர்ந்து சபையின் ஏனைய உறுப்பினர்கள் தமது கருத்துக்களை தெரிவித்ததை அடுத்து முதல்வர் சபை அமர்வை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து நிமிடத்தின் பின்னர் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சபை அமர்பு ஆரம்பிக்கப்பட்டு தற்போதும் நடைபெற்று வருகின்றது.

### மக்கள் அதிகமாக...

இதன்படி பல்பொருள் அங்காடிகள், மீன் சந்தைகள் உள்ளிட்ட அதிகளவானோர் செல்லக்கூடிய இடங்களில் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக கொழும்பு மாவட்டத்திலிருந்து வெளியேறும் தரப்பினருக்காக 11 இடங்களில் கொரோனா பரிசோதனைகளை மேற்கொள்ளும் திட்டம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த மாதத்தில் ஏதேனும் ஒருவகை கொரோனா தடுப்பூசி நாட்டுக்கு கொண்டுவரப்படும் எனவும் அவர் இதன்போது கூறியுள்ளார்.

இந்த நிலையில், கொரோனா தடுப்பூசியை ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் இராணுவத்தினரின் தலைமையில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இராணுவத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

### ஜோசப் பரராஜசிங்கம்...

குறித்த வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் இன்று (புதன்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட ஐந்து பேர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, 2015ஆம் ஆண்டு தாங்கள் கைதுசெய்யப்பட்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்ட முதலாம் 02ஆம் எதிரிகளின் வாக்குமூலமானது சுயேட்சையாக வழங்கப்படவில்லை, தூண்டுதல் அல்லது அச்சுறுத்தல் காரணமாக அந்த வாக்குமூலத்தினை வழங்கியிருந்தார்கள், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேரடியாக நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு வாக்குமூலம் வழங்கியிருந்ததாக தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றில் மீளாய்வு விண்ணப்பித்தனர்.

இதன் பிரகாரம் குறித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்தன் அடிப்படையில் 24ஆம் திகதி மட்டக்களப்பு மேல்நீதிமன்றத்தில் சட்டமா அதிபரின் ஒப்புதலின் பேரில் பிணை வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்கினை தொடர்ந்து நடாத்தமுடியாது என மட்டக்களப்பு மேல் நீதிமன்றுக்கு அறிவித்திருந்த நிலையில், வழக்கின் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர்களை விடுவித்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

### மேல் மாகாணம்...

கொழும்பு பகுதிகளில் நீண்ட காலமாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த பகுதிகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன.

எனினும் அந்த பகுதிகளிலுள்ள மக்களுக்கு தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த விதிமுறைகளை அப்பகுதி மக்கள் உரியமுறையில் பின்பற்றுகின்றார்களா என்று உறுதிப்படுத்திக்கொள்வதற்காக சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை கடைப்பிடிப்பதில்லை என்று தெரியவந்துள்ளது.

சுகாதார சட்டவிதிகளுக்கு புறம்பாக ஒன்றுகூடி கலந்துரையாடல்களில் ஈடுபடல், உணவு உட்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளை அப்பகுதி மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

தொடர்ந்தும் இவ்வாறு செயற்பட்டால், அந்த பகுதிகளில் மீண்டும் கொவிட்-19 வைரஸ் கொத்தணிகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது.

அதனால் அப்பகுதிகளை மீண்டும் தனிமைப்படுத்தி வைக்கவேண்டிய நிலைமை ஏற்படும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

### மாஸ்டர்...

அதிகாலை முதல் திரையரங்குகளில் திரையிடப்பட்டன.

அதிகாலை முதல் காட்சியை பார்க்க என நேற்று நள்ளிரவு முதல் ரசிகர்கள் யாழ் நகர் பகுதிகளில் குவிந்து, நகரில் உள்ள திரையரங்குகளின் முன்பாக காத்திருந்தனர்.

அதிகாலை காட்சி திரையிடப்பட்ட போது ரசிகர்கள் பலரும் முண்டியடித்து ரிக்கெட் கொள்வனவுகளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் அது தொடர்பில் சுகாதார பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் யாழ்.நகர் மத்தியில் அமைந்துள்ள திரையரங்கம் ஒன்றினை 14 நாட்கள் தனிமைப்படுத்தியுள்ளனர்.

தலைவாசல் Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்






# நினைவுத்தூபி இடிப்பு ஐ.நா. முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்

யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பெற்றிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டதைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் அவை முன்பு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இப் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சுவிஸ் தமிழர் இளையோர் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

யாழ் பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளே அமைந்திருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை சிங்கள பேரினவாத அரசு இடித்துடைத்ததை கண்டித்து மாணவ சமூகம், மக்கள் அதிரடியாக போராட்டத்தில் குதித்தனர். நொடிப்பொழுதில் தாயக உறவுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் புலம்பெயர் நாடுகளிலும் இளையோர்கள் சமூக வலைத்தளங்களில் தாயக நிலைமையை வெளிக்கொண்டுவந்தார்கள்.

அந்தவகையில் இன்று ஐக்கிய நாடுகள் அவை தமிழ் மக்கள் ஒன்றுகூடி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பதாதைகளை தாங்கிய வண்ணம் சிங்கள பேரினவாத அரசை கண்டிக்கும் முகமாக நிகழ்வில் கலந்துகொண்ட மக்களால் கோசங்கள் எழுப்பப்பட்டது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தமது முழுமையான ஆதரவை தாயகத்தில் போராடும் மாணவ சமூகத்திற்கு வழங்கும் உணர்வோடு தமது கடும் குளிரையும் பாராமல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி ஓவியக் கண்காட்சி



தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி ஓவியக் கண்காட்சியுடன் போராட்டம் யாழ். நகரில் இடம்பெற்றது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் மத்திய பேருந்து நிலையம் முன்பாக இன்று (புதன்கிழமை) காலை இந்தக் கண்காட்சியுடனான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்றும் தெற்கில் உள்ளவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது போன்று சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் அரசாங்கத்திடம் அரசியல் கைதிகளின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், திலீபனின் நினைவுகூரல், யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி ஆகிய இரண்டு விடயங்களிலும்




தமிழ் தேசியக் கட்சிகளும் தமிழ் தேசிய உணர்வாளர்களும் ஒன்றுசேர்ந்து செயற்பட்டது போன்று அரசியல் கைதிகளின் விடயத்திலும் அனைவரும் ஒருமித்து செயற்பட விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 50 ஆயிரத்தை நெருங்கும் கொரோனா மேலும் நால்வர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு 13 பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதுடைய பெண்ணொருவரும் ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஆணொருவரும் மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 84 வயதுடைய பெண்ணொருவரும் வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய ஆணொருவரும் கொரோனா தொற்றுக் காரணமாக இறந்துள்ளதாக பதிவாகியுள்ளன.

அதன்படி இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 244ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று (செவ்வாய்க்கிழமை) மாத்திரம் 588 புதிய கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இதனையடுத்து நாட்டில் மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 49 ஆயிரத்து 537 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 42 ஆயிரத்து 621 பேர் பூரண குணமடைந்துள்ளதோடு, 6 ஆயிரத்து 672 பேர் தொடர்ந்தும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்று சந்தேகத்தின் அடிப்படையில் 793 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற ஊழியர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

நாடாளுமன்ற ஊழியர்கள் சகலரும் இன்று முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என நாடாளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவசியமாயின் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தொற்றுறுதியான அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் தொடர்புடைய நாடாளுமன்ற பணிக்குழாமை சேர்ந்த 15 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், முன்னதாக அமைச்சர் தயாசிறிய ஜயசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பிரதமரின் அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான செயலாளர் குமாரசிறி ஹெட்டிகேவுக்கும் கொரோனா தொற்று உறுதியானதை அடுத்து, அவருடனும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூக் ஹக்கீமுடனும் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேரை தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இதுவரையில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு கடத்த இருந்த கஞ்சா கடலோர காவல் படையினரால் பறிமுதல்!

சமீப காலமாக தனுஸ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடல் அட்டை,கடல் பல்லி,கஞ்சா, சமையல் மஞ்சள் உள்ளிட்ட பொருட்கள் அதிகமாக கடத்தப்பட்டு வருகிறது.

இதனை தடுக்க இந்திய, இலங்கை சர்வதேச கடல் எல்லையில் இந்திய கடலோர காவல் படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தனுஸ்கோடி கடற்கரை வழியாக இலங்கைக்கு சட்ட விரோதமாக கஞ்சா கடத்த இருப்பதாக மண்டபம் கடலோர காவல் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து,

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை தனுஸ்கோடி அருகே உள்ள மூன்றாம் தீடையில் கடலோர காவல் படையினர் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது அந்த பகுதியில் 2 மூட்டைகளில் சுமார் 150 கிலோ கஞ்சா கடற்கரை ஓரத்தில் கரை ஒதுங்கி இருந்து.

இதனை கண்ட இந்திய கடலோர காவல் படையினரால் கஞ்சா மூட்டைகளை பறிமுதல் செய்தனர்.

இந்த கடத்தல் சம்பவத்தின் போது இலங்கையை சேர்ந்த நபர்கள் யாரும் தனுஸ்கோடி பகுயில் மறைந்துள்ளார்களா? அல்லது தமிழகத்ததைச் சேர்ந்த கடத்தல் காரர்கள் கடலோர காவல் படை வீரர்களை கண்டதும் தீவுகளில் மறைந்து கொண்டார்களா? என்பது குறித்து கரை ஓரங்களிலும் தீவு பகுதிகளிலும் கடற்படை மற்றும் மெரைன் போலிஸார் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

# வெள்ளவத்தையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பேருந்தில் வந்த கொரோனா

வெள்ளவத்தயில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்கும் பேருந்து ஓட்டுனர்கள், உதவியாளர்கள் மற்றும் பயணிகளுக்கு நேற்று (12) இரவு துரித அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களுள் பேருந்து ஒன்றின் உதவியாளர் மற்றும் மட்டக்களப்பு நோக்கி செல்லவிருந்த பயணி ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு 8.26 மில்லியன் ரூபா நன்கொடை

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு 8.26 மில்லியன் ரூபா நன்கொடை வழங்கியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த அறிக்கையில் இலங்கையில் நீதித்துறை, உணவு பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தைக் குறைத்தல் ஆகியவற்றிக்காகவே இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நன்கொடையை வழங்குவதற்கான 3 ஒப்பந்தங்களுக்கு கைச்சாத்திடும் நிகழ்வு ஐரோப்பிய ஒன்றியத்தினால் நடத்தப்பட்டதுடன், இந்த நிகழ்விற்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரியின் செயலாளர் எஸ். ஆட்டிகல கலந்து கொண்டார்.